# இன்று பொதுக்காலம் இருபத்தி ஐந்தாம் ஞாயிறு

# திருவழிபாடு ஆண்டு - B

# 2021-09-19

(*இன்றைய வாசகங்கள்:*

*சாலமோனின் ஞான நூலிலிருந்து வாசகம்:* 2:12,17-20,

*பதிலுரைப்பாடல்: திபா.* 54:1-4,6,

*திருத்தூதர் யாக்கோபு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம்:* 3:16-4:3,

*மாற்கு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்:* 9:30-37 )

## திருப்பலி முன்னுரை

*இதோ! கடவுள் எனக்குத் துணைவராய் இருக்கின்றார்: என் தலைவர் என் வாழ்வுக்கு ஆதரவாய் உள்ளோருடன் இருக்கின்றார்: தன்னார்வத்தோடு உமக்குப் பலி செலுத்துவேன்: ஆண்டவரே, உமது பெயருக்கு நன்றி செலுத்துவேன்:*

*அன்புமிக்க சகோதர சகோதரிகளே! தமது திருப்பெயரின் வல்லமையால் நம்மைக் காப்பாற்றும் விண்ணகத் தந்தையின் திருப்பெயரால் நல்வாழ்த்துக்கள் கூறி இத் திருப்பலிக் கொண்டாட்டத்திற்கு உங்களை அன்போடு வரவேற்கின்றோம். இன்று பொதுக்காலம் இருபத்தி ஐந்தாம் ஞாயிறு. இதோ! கடவுள் எனக்குத் துணைவராய் இருக்கின்றார்: என் தலைவர் என் வாழ்வுக்கு ஆதரவாய் உள்ளோருடன் இருக்கின்றார்: தன்னார்வத்தோடு உமக்குப் பலி செலுத்துவேன்: ஆண்டவரே, உமது பெயருக்கு நன்றி செலுத்துவேன்: இதுவே நன்று.' என்னும் இறைவார்தைகள் இன்று எமது இதயத்திலிருந்து எழுவதாக மாறட்டும். ஒருவர் முதல்வராக இருக்க விரும்பினால் அவர் அனைவரிலும் கடைசியானவராகவும் அனைவருக்கும் தொண்டராகவும் இருக்கட்டும். என்னும் இறைவார்த்தை எமது இயக்க ஆற்றல் சக்தியாக மாறட்டும்.இவைகளை நம் இதயத்தில் இருத்தி இத்திருப்பலியில் வரங்கேட்டுச் செபிப்போம்.*

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

***ஆசிகள் வழங்கும் ஆற்றலின் ஊற்றே இறைவா!***

*எம் திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகள், இறைமக்களாகிய நாங்கள் பணிவிடைப் பெறுவதைவிடப் பணிப் புரிவதே மேல் என்பதனை உணர்ந்து தன்னலமற்றவர்களாய் உம் மக்களுக்காய் உழைத்திட , கடவுளின் பிள்ளைகளாக வாழ வரங்களைத் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*

***இறைமகனாயிருந்தும் உம்மையே தாழ்த்திக் கொண்ட இயேசுவே, உம்மைப் போற்றுகிறோம்.***

*எங்கள் மத்தியில் உள்ள "யார் பெரியவர்?" என்னும் போட்டி மனநிலையை அகற்றி, நாங்கள் ஒருவருக்கொருவர் பணி செய்யவும், பிறரின் தலைமையை ஏற்று செயல்படவும் நல்ல மனதை எங்களுக்குத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

***எம் வாழ்வுக்கு ஆதரவாயுள்ள தந்தையே!***

*பல்வேறு நிகழ்வுகள் மூலமாக நீர் எமக்கு எப்பொழுதும் ஆதரவாயிருக்கின்றீர் என்னும் மாபெரும் உண்மையை நாங்கள் உணர்ந்து உமக்கு நன்றி சொல்லுகின்றோம். நாங்கள் ஒவ்வொருவரும் எங்கள் முன்மாதிரிகையான வாழ்வால் அமைதியை ஏற்படுத்துவோராகவும்,இரக்கமும், நற்செயல்களும் கொண்டவர்களாகவும் வாழ்வதற்கு வேண்டிய அருளை அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

***அல்லனவற்றை அழித்து நல்லனச் செய்யும் இறைவா!***

*நேர்மையானவாழ்வு வாழவும், ஆணவபோக்கை விட்டு விட்டுக் குழந்தை உள்ளம் கொண்டவராய் வாழவும், அதனால் ஏற்படும் தற்காலிகமான தோல்வியை வென்று நிரந்திரமான வெற்றிப் பெற்றிட உழைப்பையும், உறுதியையும் தரவேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்..*

***முன்னேற்றப் பாதையில் வழிநடத்தும் மூவொரு இறைவா!***

*பேராசையும் பொறாமையுமே சண்டைச் சச்சரவுக்கக் காரணம் என்பதை உணர்ந்து எம் நாட்டுத் தலைவர்கள் தீயசக்திகளின் வெளிபாடான பேராசையையும், பொறாமையையும் முற்றிலும் அவர்கள் உள்ளத்திலிருந்து நீக்கி எம் மக்கள் நலம் வாழ, அவர்கள் உழைத்திட வேண்டி வரங்களை வழங்கிட இறைவா உம்மிடம் மன்றாடுகிறோம்..*

***வாழ்வை வெற்றியாக்கும் விண்ணகத் தந்தையே!***

*மனிதருடைய வழியோ சுயநலத்தின் வழி. ஆனால் கடவுளின் வழியோ பொறுமையின் வழி, தாழ்ச்சியின் வழி என்பதை அறிந்து அடுத்தவன் வாழ்ந்தால் தானும் வாழ முடியும் என்ற நல்லெண்ணத்தை எம் இளையோரின் உள்ளத்தில் பதிவுச் செய்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*

***உமக்காகக் காத்திருப்போர்க்கு அமைதி அளிக்கும் இறைவா!***

*உம் திருஅவை இன்று சந்திக்கும் சவால்களையும், கொடுமைகளையும், அதற்கு ஏற்படும் அவபெயர்களிலிருந்தும் காத்தருளும். பொறுமையும், அமைதியும் இறுதியில் வெற்றிப் பெறும் என்ற திடமான நம்பிக்கையை எங்கள் உள்ளங்களில் நிலைபெற, உமது ஞானத்தையும் ஆசீரையும் தர வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்..*

***துன்பங்களை நீக்குபவராம் இறைவா,***

*உலகெங்கும் நீதிக்காகவும், அமைதிக்காகவும் ஏங்கும் உமது மக்களின் துன்பங்களை நீக்கி, அவர்கள் விரும்பும் நீதியும், அமைதியும் நிறைந்த உலகை உருவாக்கிட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*